கீழ் யூரோ நாணய வர்த்தகக் கடன்கள் மீதான வட்டிக் கொடுப்பனவுகள் 1983 இன் ரூ. 4,970 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1984 இல் ரூ. 5,140 இலட்சமாக அமைந்தன.

அட்டவணை 1.44

**வெளிநாட்டுக் கடன்களின் முக்கிய மூலங்கள்-1984**

ப. இ. ரூபாய்களில்

| மூலங்கள் | | செயற்திட்டக் கடன்கள் | பண்டக் கடன்கள் | ஏனைய கடன்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| ஆசிய அபிவிருத்தி வங்கி | ... | 875.5 | — | — | 875.5 |
| கனடா | ... | 260.6 | — | — | 260.6 |
| யூரோ நாணயம் | ... | — | — | 880.3 | 880.3 |
| பிரான்சு | ... | 146.4 | 73.1 | — | 219.5 |
| சேர்மன் இணைப்பாட்சிக் குடியரசு | ... | 783.0 | 89.3 | — | 872.3 |
| பன்னாட்டு அபிவிருத்தி அமைப்பு | ... | 2,034.1 | — | — | 2,034.1 |
| யப்பான் | ... | 608.5 | 255.6 | — | 864.1 |
| மனுவக்சரர்ஸ் ஹனோவர் றஸ்ற் கொம்பனி | ... | 415.6 | — | — | 415.6 |
| சவூதி அரேபிய நிதியம் | ... | 195.4 | — | — | 195.4 |
| ஸ்கண்டினேவிஸ்கா என்ஸ்கில்டா பன்கன்ஸ்–சுவீடன் | ... | 295.0 | | — | 295.0 |
| ஐக்கிய அமெரிக்க நாடுகள் | ... | 870.7 | 667.3 | — | 1,538.0 |
| ஏனையவை | ... | 292.3 | 95.1 | — | 387.4 |
| மொத்தவரவுகள் | ... | 6,777.1 | 1,180.4 | 880.3 | 8,837.8 |
| கழிக்க: மீளக்கொடுப்பனவுகள் | ... | 276.5 | 551.0 | 637.8 | 1,465.3 |
| தேறிய வரவுகள் | ... | 6,500.6 | 629.4 | 242.5 | 7,372.5 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

## பணமும் வங்கித் தொழிலும்


### பண நிரம்பல்

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில், பண, கொடுகடன் கூட்டுக்களில் ஏற்பட்ட அதிகளவான வீழ்ச்சியே 1984 ஆம் ஆண்டில் நாணயத் துறையில் அவதானிக்கப்பட்ட மிகவும் குறிப்பிடத்தக்க விடயமாகும். பொதுமக்கள் வசமுள்ள நாணயத்தையும் கேள்வி வைப்புக்களையும் கொண்டுள்ள குறுகிய பண நிரம்பல் ($M_1$) 1983 இன் ரூ. 29,880 இலட்சம் (25 சதவீதம்) கொண்ட அதிகளவு உயர்வான அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் ரூ. 20,760 இலட்சத்தால் (14 சதவீதம்) அதிகரித்தது. வர்த்தக வங்கிகள் வசமுள்ள தனியார் துறையின் தவணை, சேமிப்பு வைப்புக்களைக் கொண்டுள்ள போலி நாணயம் 1983 இன் ரூ. 37,590 இலட்ச (20 சதவீதம்) அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1984 இல் ரூ. 40,950 இலட்சத்தால் (18 சதவீதம்) அதிகரித்தது. இதன் விளைவாக $M_1$ ஐயும் போலி நாணயத்தையும் கொண்ட விரிந்த பணம் ($M_2$) முன்னைய ஆண்டின் ரூ. 67,470 இலட்ச (22 சதவீதம்) அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் ரூ. 61,710 இலட்சத்தால் (17 சதவீதம்) அதிகரித்து ரூ. 434,270 இலட்சமாக விளங்கியது.

1984 இல் பணநிரம்பலில் பதிவு செய்யப்பட்ட இவ்வதிகரிப்பு உள்நாட்டு கொடுகடனின் வீழ்ச்சியினதும், வெளிநாட்டு வங்கித்தொழில் சொத்துக்களின் (தேறிய) தொடர்ச்சியான அதிகரிப்பினதும் விளைவாகும். அரசிற்கான தேறிய கொடுகடனின் கடுமையான வீழ்ச்சியே உள்நாட்டுக் கொடுகடனின் விரிவாக்க

## பண நிரம்பல்

மாதாந்தம்




இலங்கை மத்திய வங்கி

வீதத்தினைக் குறைவடையச் செய்ததற்கான முக்கிய காரணியாகும். இதேவேளை, தனியார் துறைக்கான மொத்தக் கொடுகடனும் அத்தியாவசியமல்லா முற்பணங்கள் மீது மத்திய வங்கியால் ஏற்படுத்தப்பட்ட கொடுகடன் கட்டுப்பாடுகளின் விளைவாக வீழ்ச்சியடைந்தது.

நாணயக் கூட்டுக்களின் அமைப்பின் விரிவான பகுப்பாய்வு, இவ்வாண்டில் $M_1$ இன் மிதமான அதிகரிப்புக்கு முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் கேள்வி வைப்புக்களில் குறிப்பிடத்தக்களவு குறைவான வளர்ச்சியே முக்கிய காரணியாகும் என்பதைக் காட்டுகின்றது. பண நிரம்பலில் கேள்வி வைப்புக்கூறு 1983 இன் 31 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1984 இல் 10 சதவீதத்தால் அதிகரித்தது. இதன் விளைவால் $M_1$ இல் கேள்வி வைப்புக்களின் பங்கு 1983 இன் 51 சதவீதத்திலிருந்து 1984 இல் 49 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது. இதேவேளையில் பொதுமக்கள் வசமுள்ள நாணயம் 1983 இன் 20 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் இவ்வாண்டில் 19 சதவீதத்தால் அதிகரித்தது. முன்னைய ஆண்டுகளைப் போலவே நாணயக் கையிருப்புக்களில் மாதாந்த ரீதியில் அதியுயர் அதிகரிப்புக்கள் மாச்சிலும் (8 சதவீதம்) திசெம்பரிலும் (5 சதவீதம்) பதிவுசெய்யப்பட்டு விழாக்காலங்களில் பணத்திற்கான உயர்ந்த கேள்விகளைப் பிரதிபலித்தன.

போலி நாணயத்தின் அதிகரிப்பிற்கு 1983 இல் அரச கூட்டுத்தாபனங்களின் தவணை, சேமிப்பு வைப்புக்கள் முன்னைய ஆண்டின் ரூ. 1,770 இலட்சம் அல்லது 4 சதவீத வீழ்ச்சிக்கு மாருக 1984 இல் ரூ. 14,280 இலட்சம் அல்லது 35 சதவீதத்தால் அதிகரித்தமையே பெருமளவுக்குக் காரணமாகும். ஏனைய தனியார் துறைக் கூறுகள் வசமுள்ள தவணை, சேமிப்பு வைப்புக்கள் 1983 இன் 27 சதவீத அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1984 இல் 15 சதவீதத்தால் அதிகரித்தன. ஏனைய தனியார் துறைக் கூறுகளின் வைப்புக்களின் விரிவாக்க வீத வீழ்ச்சிக்கு ஒப்பீட்டு ரீதியில் வர்த்தக வங்கிகளினுல் வைப்பு வீதங்கள் மீது செய்யப்பட்ட அதிகளவு குறைப்பின் விளைவாக வர்த்தக வங்கிகளிலிருந்து தேசிய சேமிப்பு வங்கி, நிதிக் கூட்டு நிலையங்கள் போன்ற ஏனைய வைப்புக்கள் திரட்டும் நிறுவனங்களுக்கு வைப்புக்களின் வெளிப்பாய்ச்சல் காணப்பட்டமையும் ஓரளவு காரணமாகும். வர்த்தக வங்கிகள் வசமிருந்த கூட்டுறவு நிறுவனங்களின் வைப்புக்களின் வளர்ச்சியும் 1983 இன் 31 சதவீதத்திலிருந்து 1984 இல் 12 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.

1984 இல் பண நிரம்பல் வளர்ச்சிக்குப் பங்களித்த அதி முக்கிய காரணி, பெரும்பாலும் தேயிலையிலிருந்தான அதிகரித்த ஏற்றுமதி வருவாய்களினுல் வெளிநாட்டு வங்கித்தொழில் சொத்துக்களில் (தேறிய) ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பேயாகும். வெளிநாட்டு வங்கித் தொழில் சொத்துக்கள் (தேறிய) 1983 இன் ரூ. 8,150 இலட்சம் கொண்ட மிதமான அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1984 இல் ரூ. 67,770 இலட்சத்தால் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தன. மாருக, உள்நாட்டுக் கொடுகடன் விரிவாக்கம் முன்னைய ஆண்டினைவிட குறிப்பிடத்

தக்களவு குறைவானதாக விளங்கி 1984 இல் நாணய வளர்ச்சி வீதத்தின் வீழ்ச்சிக்கு முக்கிய காரணியாகவும் காணப்பட்டது. உள்நாட்டுக் கொடுகடன் 1983 இன் ரூ. 68,950 இலட்ச (16 சதவீதம்) அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1984 இல் ரூ. 6,330 இலட்சத்தால் (1 சதவீதம்) அதிகரித்தது. வங்கித் தொழில் முறையில் ஏனைய விடயங்கள் (தேறிய) முன்னைய ஆண்டின் ரூ. 9,640 இலட்சத் துடன் ஒப்பிடுகையில் 1984 இல் ரூ. 12,400 இலட்சத்தால் அதிகரித்துப் பண நிரம்பல்மீது சுருக்கத் தாக்கமொன்றினை ஏற்படுத்தியது. இவ்வாண்டில் ஏனைய விடயங்களின் (தேறிய) அதிகரிப்பு 1984 யூனிலிருந்து வெளியிடப்பட்ட மத்திய வங்கி பிணைகளின் காரணத்தால் ஏனைய பொறுப்புக்களின் அதிகரிப்பில் முக்கிய மாக பிரதிபலிக்கப்பட்டது.

நாட்டின் சென்மதி நிலுவை நிலைமையில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தின் விளைவால் இவ்வாண்டு முழுவதிலும் வெளிநாட்டு வங்கித் தொழில் சொத்துக்கள் (தேறிய) தொடர்ந்து அதிகரித்தன. வெளிநாட்டிலுள்ள மத்திய வங்கியின் காசு நிலுவைகளும் ரூ. 38,390 இலட்சத்தால் அதிகரித்த வேளையில் வெளிநாட்டு அரச பிணைகளிலும் திறைசேரி உண்டியல்களிலுமான முதலீடுகள் ரூ. 14,930 இலட்சத்தால் அதிகரித்தன. வெளிநாட்டிலுள்ள காசும் நிலுவைகளினதும் அதிகரிப்பு உயர்வான ஏற்றுமதி வருவாய்களின் விளைவாக வர்த்தக வங்கிகளிலிருந்து மத்திய வங்கியினால் கொள்வனவு செய்யப்பட்ட தேறிய வெளிநாட்டுச் செலாவணி அதிகரிப்பில் பெருமளவில் பிரதிபலிக்கப்பட்டது.

உள்நாட்டுக் கொடுகடனின் விரிவாக்க வீத வீழ்ச்சிக்கு அரசிற்கான தேறிய கொடுகடன் வீழ்ச்சியே முக்கிய காரணியாக விளங்கியதோடு, இது தனியார் துறைக்கான மொத்தக் கொடுகடன் அதிகரிப்பின் விரிவாக்கத் தாக்கத்தினை ஏறத்தாழ எதிரீடு செய்தது. அரசிற்கான தேறிய கொடுகடன் 1983 இன் ரூ. 3,830 இலட்சம் அல்லது 2 சதவீத அதிகரிப்பிற்கு மாறாக 1984 இல் ரூ. 29,790 இலட்சத்தால் (17 சதவீதத்தால்) வீழ்ச்சியடைந்தது. இதன் விளை வாக மொத்த உள்நாட்டுக் கொடுகடனில் அரசிற்கான தேறிய கொடுகடனின் பங்கு 1983 இன் 36 சதவீதத்திலிருந்து 1984 இல் 29 சதவீதத்திற்கு வீழ்ச்சி யடைந்து வங்கித் தொழில் அமைப்பில் அரசின் குறைவான தங்கியிருப்பைக் காட்டியது. அரசிற்கான தேறிய கொடுகடன் வீழ்ச்சி அரசிற்கான மொத்தக் கொடுகடனில் ரூ. 28,080 இலட்ச (13 சதவீதம்) வீழ்ச்சியினதும், அரச வைப்புக்களிலும், காசு நிலுவைகளிலும் ரூ. 1,710 இலட்சம் அல்லது 5 சதவீத அதிகரிப்பினதும் தேறிய விளைவாகும். மத்திய வங்கியிடமிருந்தான அரசின் கடன்பாடுகள் 1983 இன் ரூ. 13,930 இலட்ச (8 சதவீதம்) அதிகரிப் பிற்கு மாறாக 1984 இல் ரூ. 41,440 இலட்சத்தால் (21 சதவீதம்) கணிசமாக வீழ்ச்சியுற்றது. இதுஅரச, அரசினால் உத்தரவாதமளிக்கப்பட்ட பிணைகளின் கையிருப் பில் ஏற்பட்ட ரூ. 53,930 இலட்ச வீழ்ச்சியினதும், தற்காலிக முற்பணங்களில் ஏற் பட்டரூ. 12,490 இலட்ச அதிகரிப்பினதும் தேறிய விளைவாகும். இதே வேளையில் அர சிற்கான வர்த்தக வங்கிகளின் மொத்தக் கொடுகடன் 1983 இன் ரூ. 1,400 இலட்ச (8 சதவீதம்) வீழ்ச்சிக்கு மாறாக 1984 இல் ரூ. 13,360 இலட்சத்தால் (85 சத வீதம்) அதிகரித்தது. வர்த்தக வங்கிகளிடமிருந்தான அரசின் கடன்பாட்டு அதிகரிப்பு பெரும்பாலும் இரண்டாந்தர திறைசேரி உண்டியல் வடிவிலான உடமைகள் ரூ. 14,040 இலட்சமாக விளங்கியதுடன் இது இச்சந்தையில் வர்த் தக வங்கிகளின் மேலதிக நிதியங்களின் பாய்ச்சலைக் காட்டியது.

## அட்டவணை 1.45

## நாணயக் கூட்டுக்கள் 1982 – 1984


தொகை ரூபா பத்து இலட்சங்களில்

| | குறுகிய பண நிரம்பல் M1 | | | | | | விரிந்த பண நிரம்பல் M2 | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 1982 | 1983 | 1984 | 1981ஐ விட 1982இல் %மாற்றம் | 1982ஐவிட 1983இல் %மாற்றம் | 1983ஐ விட 1984இல் % மாற்றம் | 1982 | 1983 | 1984 | 1981ஐ விட 1982இல் %மாற்றம் | 1982ஐ விட 1983இல் % மாற்றம் | 1983ஐ விட 1984இல் % மாற்றம் |
| சனவரி ... | 11,046 | 11,852 | 14,964 | + 20.0 | + 7.3 | + 26.3 | 26,890 | 30,802 | 38,277 | + 31.0 | + 14.5 | + 24.3 |
| பெப்புருவரி ... | 11,178 | 12,234 | 14,939 | + 20.4 | + 9.4 | + 22.1 | 26,758 | 31,708 | 39,031 | + 32.5 | + 18.5 | + 23.1 |
| மாச்சு ... | 11,671 | 12,986 | 15,439 | + 15.3 | + 11.2 | + 18.9 | 28,240 | 32,874 | 39,762 | + 28.5 | + 16.4 | + 21.0 |
| எப்பிறல் ... | 11,276 | 12,842 | 15,317 | + 17.8 | + 13.9 | + 19.3 | 28,395 | 33,114 | 39,629 | + 31.8 | + 16.6 | + 19.7 |
| மே ... | 11,132 | 12,606 | 14,331 | + 21.5 | + 13.2 | + 13.7 | 29,128 | 32,491 | 39,133 | + 35.9 | + 11.5 | + 20.4 |
| யூன் ... | 10,815 | 12,589 | 14,768 | + 19.8 | + 16.4 | + 17.3 | 28,739 | 32,798 | 39,690 | + 32.6 | + 14.1 | + 21.0 |
| யூலை ... | 10,710 | 12,964 | 14,901 | + 17.8 | + 21.4 | + 14.9 | 28,459 | 33,846 | 39,642 | + 29.0 | + 18.9 | + 17.1 |
| ஓகத்து ... | 10,892 | 12,977 | 14,811 | + 18.5 | + 19.1 | + 14.1 | 28,494 | 33,732 | 39,767 | + 28.6 | + 18.4 | + 17.9 |
| செத்தெம்பர் ... | 11,171 | 13,322 | 15,549 | + 18.3 | + 19.3 | + 16.7 | 29,781 | 34,620 | 40,808 | + 27.0 | + 16.2 | + 17.9 |
| ஒற்றோபர் ... | 11,413 | 13,572 | 16,041 | + 19.9 | + 18.9 | + 18.2 | 30,161 | 35,314 | 41,586 | + 26.6 | + 17.0 | + 17.8 |
| நவெம்பர் ... | 11,452 | 13,544 | 15,678 | + 21.1 | + 18.3 | + 15.8 | 29,860 | 35,324 | 42,007 | + 25.3 | + 18.3 | + 18.9 |
| திசெம்பர் ... | 11,760 | 14,748 | 16,824 | + 17.4 | + 25.4 | + 14.1 | 30,510 | 37,257 | 43,427 | + 24.9 | + 22.1 | + 16.6 |
| மாதாந்த சராசரி | 11,210 | 13,020 | 15,297 | + 18.9 | + 16.1 | + 17.5 | 28,785 | 35,657 | 40,230 | + 29.3 | + 16.9 | + 19.5 |

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

## உள்நாட்டுக் கொடுகடன்

மாதாந்தம்




வங்கித் தொழில் முறையினை அரசு நாடுவதனைக் குறைப்பதற்குப் பல காரணிகள் உதவின. முதலாவதாக இவ்வாண்டில் அரசிறையில் 50 சதவீத அதிகரிப்பு அரசின் மூலவளக் கிடைத்தலை அதிகரித்தது. இரண்டாவது 1984 பெப்புருவரியில் மத்திய வங்கியின் இலாபத்தின் ரூ. 16,500 இலட்சத்தின் மாற்றல் மத்திய வங்கிக்கான அரசின் வெளிநின்ற பொறுப்புக்களில் ஓரளவைத் தீர்ப்பதற்காகப் பயன்படுத்தப்பட்டது. மூன்றாவது வெளிநாட்டு உதவியில் ஏற்பட்ட அதிகரிப்பு அரசின் மூலவளங்களை மேலும் உயர்த்தியது. நான்காவதாக வங்கியல்லா மூலங்களினால் ரூபா பிணைகளுக்கு வழங்கப்பட்ட அதிகரித்த உதவு தொகைகள் வங்கி நிதியிடலில் அரசு தங்கியிருத்தலைக் குறைப்பதற்கு உதவின.

தனியார் துறைக்கான மொத்தக் கொடுகடன் 1983 இன் அதிகூடிய அதிகரிப்பான ரூ. 65,120 இலட்சம் அல்லது 26 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1984 இல் ரூ. 36,120 இலட்சம் அல்லது 11 சதவீதத்தால் அதிகரித்தது. முன்னுரிமை அல்லா கடன் வழங்கல்களின்மீது கட்டுப்பாடுகளை விதிப்பதற்காக 1984 மாச்சிலும் மேயிலும் மத்திய வங்கியினால் அறிமுகப்படுத்தப்பட்ட தெரிந்தெடுக்கப்பட்ட கொடுகடன் கட்டுப்பாட்டு வழிமுறைகளே தனியார் துறைக்கான அரசின் கொடுகடன் வளர்ச்சிவீத வீழ்ச்சிக்குப் பெருமளவில் காரணமாகவிருந்தது. மேலும் ஏற்றுமதித் துறையிலிருந்து கிடைக்கும் அதிகரித்த வருவாய்களும் முதலீட்டு நிதியங்களுக்கான கேள்வியைக் குறைவடையச் செய்தன. ஏனைய தனியார் துறைத் தொகுதிகளுக்கான வங்கிக் கொடுகடன் 1983 இன் ரூ. 61,700 இலட்சம் (32 சதவீதம்) அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1984 இல் ரூ. 41,040 இலட்சத்தால் (16 சதவீதத்தால்) அதிகரித்தது. ஏனைய தனியார் துறைக் கூறுகளுக்கான கொடுகடனில் ஏற்பட்ட அதிகரிப்புக்கள், கடன்கள் (ரூ. 28,610 இலட்சம்) மேலதிகப் பற்றுக்கள் (ரூ. 9,880 இலட்சம்) இறக்குமதி உண்டியல்கள் (ரூ. 1,160 இலட்சம்) ஆகிய வடிவத்தில் அமைந்தன. நோக்கரீதியான அடிப்படையில், இறக்குமதிகளும் நுகர்வுக்குமான வங்கிக் கொடுகடன் வீழ்ச்சியைப் பதிவுசெய்த வேளையில் ஏற்றுமதி, சில்லறை மொத்த விற்பனை வியாபாரம், வர்த்தகம், கைத்தொழில் போன்றவற்றுக்கான கொடுகடன் இவ்வாண்டில் அதிகரித்தது. கூட்டுறவு நிறுவனங்களுக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் முன்னைய ஆண்டின் ரூ. 6,350 இலட்சம் (54 சதவீதம்) கொண்ட கணிசமான அதிகரிப்புக்கு மாறாக 1984 இல் ரூ. 2,550 இலட்சத்தால் (14 சதவீதம்) வீழ்ச்சியடைந்தது. நெல் கொள்வனவுக்கும் சந்தைப்படுத்தலுக்குமாக நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு வழங்கப்பட்ட பண்ட பெறுகை முற்பணங்களில் ஏற்பட்ட ரூ. 3,310 இலட்ச வீழ்ச்சியே கூட்டுறவு நிறுவனங்களின் கடன்பாடுகளின் வீழ்ச்சிக்கான முக்கிய காரணியாகும். நெற்சந்தைப்படுத்தல் சபைக்கான கொடுகடன் வீழ்ச்சிக்குச் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளில் அதன் குறைவடைந்த பங்கும் 1984 மாச்சில் மத்திய வங்கியினால் மீள்நிதியிடலின் மீது விதிக்கப்பட்ட எல்லையும் காரணிகளாகும். அரச கூட்டுத்தாபனங்களுக்கான வங்கிக் கொடுகடன் 1983 இல் ரூ. 2,920 இலட்ச (6 சதவீதம்) வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் 1984 இல் ரூ. 2,370 இலட்சத்தால் (6 சதவீதம்) வீழ்ச்சியடைந்தது. இவ்வீழ்ச்சியானது மேலதிகப் பற்

## வெளிநாட்டு வங்கிச் சொத்துக்கள்

மாதாந்தம்




இலங்கை மத்திய வங்கி

## அட்டவணை 1.46

## நாணயக் கூட்டுக்களும் ஏதுக்காரணிகளும்

தொகை பத்து இலட்சம் ரூபாய்களில்

| விடயம் | 1982 திசெம்பர் | 1983 திசெம்பர் | 1984 திசெம்பர் | மாற்றம் 1982/1983 தொகை | மாற்றம் 1982/1983 சதவீதம் | மாற்றம் 1983/1984 தொகை | மாற்றம் 1983/1984 சதவீதம் |
|---|---|---|---|---|---|---|---|
| **நாணயக் கூட்டுக்கள்** | | | | | | | |
| 1. மக்களால் வைத்திருக்கப்பட்ட நாணயம் ... | 5,987.7 | 7,200.1 | 8,560.9 | + 1,212.4 | + 20.3 | + 1,360.8 | + 18.9 |
| 2. மக்களால் வைத்திருக்கப்பட்ட கேள்வி வைப்புக்கள் ... | 5,772.1 | 7,547.8 | 8,262.9 | + 1,775.7 | + 30.8 | + 715.2 | + 9.5 |
| குறுகிய பண நிரம்பல் (M1) ... | 11,759.8 | 14,747.9 | 16,823.8 | + 2,988.1 | + 25.4 | + 2,076.0 | + 14.1 |
| 3. வர்த்தக வங்கிகளில் தனியார்துறை வைத்திருக்கும் தவணை சேமிப்பு வைப்புக்கள் ... | 18,750.1 | 22,509.0 | 26,603.5 | + 3,758.9 | + 20.0 | + 4,094.5 | + 18.2 |
| 3.1 கூட்டுறவு நிறுவனங்கள் ... | 357.3 | 469.2 | 526.8 | + 111.9 | + 31.3 | + 57.6 | + 12.3 |
| 3.2 அரச கூட்டுத்தாபனங்கள் ... | 4,257.8 | 4,081.1 | 5,508.8 | — 176.7 | — 4.2 | + 1,427.7 | + 35.0 |
| 3.3 ஏனைய தனியார்துறை வாடிக்கையாளர்கள்* ... | 14,135.0 | 17,958.7 | 20,567.9 | + 3,823.7 | + 27.1 | + 2,609.2 | + 14.6 |
| **விரிந்த பண நிரம்பல் (M2)** ... | **30,509.9** | **37,256.9** | **43,427.3** | **+ 6,747.0** | **+ 22.1** | **+ 6,170.5** | **+ 16.6** |
| **ஏதுக்காரணிகள்** | | | | | | | |
| 1. உள்நாட்டுக் கொடுகடன் ... | 42,397.6 | 49,293.0 | 49,926.2 | + 6,895.4 | + 16.3 | + 633.2 | + 1.3 |
| 1.1 அரசிற்கு வழங்கப்பட்ட தேறிய கொடுகடன் ... | 17,150.2 | 17,533.1 | 14,554.4 | + 382.9 | + 2.2 | — 2,978.7 | — 17.0 |
| 1.1.1 அரசிற்கு வழங்கப்பட்ட மொத்தக் கொடுகடன் ... | 19,719.8 | 20,972.1 | 18,164.6 | + 1,252.3 | + 6.4 | — 2,807.5 | — 13.4 |
| மத்திய வங்கியால் ... | 18,000.5 | 19,393.0 | 15,249.1 | + 1,392.5 | + 7.7 | — 4,143.9 | — 21.4 |
| வர்த்தக வங்கிகளால் ... | 1,719.3 | 1,579.1 | 2,915.5 | — 140.2 | — 8.2 | + 1,336.4 | + 84.7 |
| 1.1.2 அரசின் வைப்புக்களும் காசு நிலுவைகளும் ... | — 2,569.6 | — 3,439.0 | — 3,610.2 | — 869.4 | — 33.8 | — 171.2 | — 5.0 |
| 1.2 தனியார்துறைக்கு வழங்கப்பட்ட மொத்தக் கொடுகடன் ... | 25,247.4 | 31,759.9 | 35,371.8 | + 6,512.4 | + 25.8 | + 3,611.9 | + 11.4 |
| 1.2.1 கூட்டுறவு நிறுவனங்கள் ... | 1,187.7 | 1,822.7 | 1,567.6 | + 634.9 | + 53.5 | — 255.1 | — 14.0 |
| 1.2.2 அரச கூட்டுத்தாபனங்கள் ... | 4,677.4 | 4,385.2 | 4,148.2 | — 292.3 | — 6.2 | — 236.8 | — 5.5 |
| 1.2.3 ஏனைய தனியார்துறை வாடிக்கையாளர்கள் ... | 19,382.3 | 25,552.1 | 29,656.0 | + 6,169.8 | + 31.5 | + 4,103.8 | + 16.1 |
| 2. வெளிநாட்டு வங்கித் தொழில் சொத்துக்கள் (தேறிய) ... | 2,371.8 | 3,186.9 | 9,964.1 | + 815.1 | + 34.4 | + 6,777.2 | + 212.7 |
| 3. ஏனைய விடயங்கள் (தேறிய) ... | — 14,259.5 | —15,223.0 | —16,463.0 | — 963.5 | | — 1,239.9 | |
| 3.1 மத்திய வங்கியின் ஏனைய பொறுப்புக்கள் (தேறிய) ... | — 9,382.7 | — 9,417.4 | — 9,982.6 | — 34.6 | | — 565.2 | |
| 3.2 வர்த்தக வங்கிகளின் ஏனைய பொறுப்புக்கள் (தேறிய) ... | — 4,891.2 | — 6,319.3 | — 6,506.3 | — 1,428.1 | | — 186.9 | |
| 3.3 இடைப்போக்கிலுள்ள விடயங்கட்கான சீராக்கங்கள் ... | 14.4 | 513.7 | 25.9 | + 499.3 | | — 487.8 | |
| **விரிந்த பண நிரம்பல்(M2)** ... | **30,509.9** | **37,256.9** | **43,427.3** | **+ 6,747.0** | **+ 22.1** | **+ 6,170.5** | **+ 16.6** |

குறிப்பு: அடையாளங்கள் M2இன் மீது ஏற்பட்ட தாக்கத்தைக் குறிக்கின்றன.

* வதிவற்றோர் வெளிநாட்டு நாணய வைப்புக்கள் தவிர.

மூலம்: இலங்கை மத்திய வங்கி.

றுக்களில் ஏற்பட்ட ரூ. 5,220 இலட்சங் கொண்ட வீழ்ச்சியினதும் கடன்கள், பண விடயங்கள், இறக்குமதி உண்டியல்கள் ஆகியவற்றில் ஏற்பட்ட ரூ. 2,850 இலட்ச அதிகரிப்பினதும் தேறிய விளைவாகும். மேலதிகப் பற்றுக்களின் வீழ்ச்சிக்குப் பங்களிக்கும் முதன்மைக் காரணி இரு பெருந்தோட்டக் கூட்டுத்தாபனங்களும் அவற்றின் முன்னேற்றமடைந்த நிதிநிலைமைகளின் காரணமாக வெளிநின்ற படு கடன்களை வர்த்தக வங்கிகளுக்கு மீளச் செலுத்தியமையேயாகும். மேலும் முன்னைய ஆண்டுகளைப் போலவே, இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கைக் கப்பற் கூட்டுத்தாபனம், இலங்கைச் சீமெந்துக் கூட்டுத்தாபனம் போன்ற சில முதன்மைக் கூட்டுத்தாபனங்கள் இவ்வாண்டில் தொடர்ந்தும் வெளிநாட்டுக் கடன்பாடுகளையே நாடியதோடு இதனால் உள்நாட்டு வங்கிக் கொடுகடனில் தங்கியிருத்தலையும் குறைத்தன.

பணவீக்க வீதவீழ்ச்சி காரணமாக இவ்வாண்டில் உள்நாட்டு விலைமட்டங்களில் மெச்சத்தக்க வீழ்ச்சி காணப்பட்டது. $M_1$ இனதும் $M_2$ இனதும் வேகங்கள் 1983 இல் முறையே 8.29, 3.20 இலிருந்து 1984 இல் முறையே 7.40, 2.83 ஆக வீழ்ச்சியடைந்து விலை மட்டங்களின் மீதான குறைவான கேள்வி அழுத்தத்தினைக் காட்டின. இது 1983 இன் 21 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணின் மிதமான 9 சதவீத (புள்ளிக்குப் புள்ளி) அடிப்படையில் அதிகரிப்பில் பிரதிபலித்தது. எனினும் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் ஆண்டுச் சராசரி அதிகரிப்பு 1983 இன் 14 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 1984 இல் 17 சதவீதத்திற்கு வகைகூறி ஆண்டின் முதல் அரைப் பகுதியில் விலைகள் மீது கணிசமானளவு சுருக்கத் தாக்கத்தினைப் பெருமளவில் பிரதிபலித்தது.

**வர்த்தக வங்கித்தொழில்**

வர்த்தக வங்கித் தொழிலில் அவதானிக்கப்பட்ட மிகவும் குறிப்பிடத்தக்க பண்பு ஆண்டு முழுவதிலும் வங்கிகளால் பட்டுணரப்பட்ட மேலதிக திரவத் தன்மையாகும். அதிகரித்த வெளிநாட்டுச் சொத்துக்களின் காரணமாகத் தொடர்ந்த திரவத் தன்மை உட்பாய்ச்சலும் ஆண்டின் தொடக்கத்தில் உயர்வான வைப்பு வீதங்களில் திரட்டப்பட்ட அதிகளவான வைப்புக்களுமே இதனை விரிவாக்கிய முதன்மைக் காரணியாகும். மத்திய வங்கியினால் வர்த்தக வங்கிகளுக்குத் தண்ட வீதத்தில் வழங்கப்பட்ட தற்காலிக திரவத் தன்மை வசதி 1983 பிற்பகுதியில் மீளப் பெறப்பட்டமை வைப்புக்களின் திரட்டலை அதிகரிப்பதன் மூலம் அவற்றின் திரவத் தன்மை நிலையை முன்னேற்றுவதற்குக் கட்டாயப்படுத்தின. அதன்படி இரு அரச வங்கிகள் உட்படப் பல வங்கிகள் தவணை, சேமிப்பு வைப்புக்கள் இரண்டினதும் குறிப்பாகக் குறுகிய தவணை வைப்புக்கள் மீதான வட்டி வீதங்களை 1984 முற்பகுதியில் அதிகரித்தன. இதனைத் தொடர்ந்து, தனியார் துறையின் தவணை, சேமிப்பு வைப்புக்கள் ஆண்டின் முதலரைப்பகுதியில் ரூ.24,130 இலட்சத்தால் அதிகரித்தன. மேலும் முன்னுரிமையல்லாத்துறைக்கான கடன் வழங்கல்கள் மீதான கொடுகடன் கட்டுப்பாடுகள் மேலதிகத் திரவத் தன்மை நிலைமைக்கு உதவியளித்த வர்த்தக வங்கிகளின் கடன் வழங்கல் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்தின.

வங்கிகளுக்கிடையான அழைப்பு பணச் சந்தையின் கொடுக்கல் வாங்கல்கள் வர்த்தக வங்கிகளின் மேலதிகத் திரவத் தன்மையை அதிகளவில் எடுத்துக் காட்டுகின்றன. குறுகிய தவணை நிதியங்களுக்கான கேள்வியின் வீழ்ச்சியினைப் பிரதிபலிக்கும் வண்ணம் இச்சந்தையில் கொடுக்கல் வாங்கல்கள் ஆண்டின் இரண்டாம் அரைப் பகுதியில் வீழ்ச்சியடைந்தன. இதேபோல 1983 இறுதியில் 20—37 சதவீத வீச்சில் நிலவிய அழைப்புப் பணச் சந்தையின் வட்டி வீதங்கள் 1984 இறுதியில் ஆண்டொன்றிற்கு 14.0—15.5 சதவீத வீச்சுக்கு வீழ்ச்சியடைந்தன. இரண்டாந்தர திறைசேரி உண்டியல் சந்தையில் கொடுக்கல் வாங்கல்கள் அதிகரித்தமையிலும் வர்த்தக வங்கிகளின் மேலதிகத் திரவத் தன்மை நிலைமை பிரதிபலித்தது. இரண்டாந்தரத் திறைசேரி உண்டியல் சந்தை மேலதிக நிதியங்களுக்கு வசதியான முதலீடு ஒன்றுகப் பல வங்கிகள் அறிந்துள்ளதால் தேறிய விற்பனைகள் 1983 இறுதியில் ரூ. 590 இலட்சங்களிலிருந்து 1984 இறுதியில் ரூ. 15,630 இலட்சத்திற்குக் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தன. கேள்வி வைப்புக்களுக்குத் திரவச் சொத்துக்களின் விகிதம் 1983 இறுதியில் 128 சதவீதத்திலிருந்து 1984 இறுதியில் 136 சதவீதத்திற்கு அதிகரித்தமையையும் வர்த்தக வங்கிகளில் காணப்பட்ட மேலதிக திரவத் தன்மை நிலைமையினைப் பிரதிபலித்தது.

வர்த்தக வங்கிகள் தங்கள் வைப்புக்கள் திரட்டல் முயற்சியினைத் தொடர்ந்தும் வைப்புச் சான்றிதழ்கள் வழங்குவதன் மூலமாகவே மேற்கொண்டு பதுக்கி வைக்கப்பட்ட பணத்தினை வங்கித் தொழில் முறையினுள் ஈர்த்தன. வைப்புச் சான்றிதழ்களின் வெளிநிற்கும் தொகை 1983 இன் ரூ. 6,100 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1984 இறுதியில் ரூ. 9,080 இலட்சத்திற்கு வகை கூறியது. சில வங்கிகள் சில கிளைகளில் அவற்றின் வேலை நேரத்தினை அதிகரித்ததன் மூலம் வங்கித் தொழில் சேவைகளை முன்னேற்றின.

இவ்வாண்டில் இரண்டு வணிக வங்கிகளான வரையறுக்கப்பட்ட மக்கள் வணிக வங்கியும், இலங்கை வணிக வங்கியும் அவற்றின் தொழிற்பாடுகளைத் தொடர்ந்தும் விரிவாக்கின. மக்கள் வணிக வங்கி ஏற்றுமதிகள் சார்ந்த செயற்றிட்டங்கள், செயற்றிட்ட இனங்காணல், கூட்டுக்கடன் வழங்கல் ஆகியவற்றை அபிவிருத்தி செய்தவேளையில் வரையறுக்கப்பட்ட இலங்கை வணிக வங்கி தனது ஆலோசனை, மதியுரை வழங்கல் பணிகளைக், கருவிகள் குத்தகை, வர்த்தக உண்டியல்களின் கழிவு வசதிகள், தரகு ஆகியவற்றிற்குப் பன்முகப்படுத்தியது.

மிடில் ஈஸ்ற் வங்கி வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவைத் திறந்ததோடு, இலங்கையில் தொழிற்படும் வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகளின் எண்ணிக்கையை 1984 இறுதியில் 25 ஆக உயர்த்தியது. முன்னைய ஆண்டினைப் போலவே வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகளின் நடவடிக்கைகள் மிதமான வளர்ச்சியைப் பதிவு செய்தது. வெளிநாட்டு நாணய வங்கித் தொழில் பிரிவுகளின் மொத்தச் சொத்துக்கள்—பொறுப்புக்கள் ஆண்டின் இறுதியில் ரூ. 198,700 இலட்சங்களாக (ஐ. அ. டொலர் 7,560 இலட்சம்) விளங்கின.

வர்த்தக வங்கிகளின் மொத்த மூலவளங்களின் அதிகரிப்பு 1983 இன் ரூ. 101,880 இலட்சங் கொண்ட உயர்ந்த அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1984 இல் ரூ. 61,710 இலட்சமாகத் தாழ்ந்து காணப்பட்டது. இவ்வாண்டில் மொத்த வைப்புக்கள் ரூ. 58,430 இலட்சத்தால் அதிகரித்தன. 1984 இல் வர்த்தக

வங்கிகளின் உள்நாட்டு வெளிநாட்டுக் கடன்பாடுகள் இரண்டும் முறையே ரூ. 3,950 இலட்சத்தாலும் ரூ. 1,060 இலட்சத்தாலும் வீழ்ச்சியுற்று வங்கிகளின் அதிகரித்த திரவத் தன்மையைப் பிரதிபலித்தன.

வர்த்தக வங்கிகளின் மூலவளங்களில் மாற்றல்களும், அவற்றின் பயன்பாடும் தேறிய அடிப்படையில் அட்டவணை 1.47 இல் தரப்பட்டுள்ளன. இவ்வாண்டில் அரச கூட்டுத்தாபனங்களும், கூட்டுறவு நிறுவனங்களும் வர்த்தக வங்கிகளின் மூலவள ஆக்கத்திற்காக முறையே ரூ. 17,320 இலட்சம், ரூ. 3,310 இலட்சமும் கொண்ட தேறிய உதவு தொகைகளை வழங்கின. இதேவேளை ஏனைய தனியார் துறை 1983 இன் ரூ. 10,180 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1984 இல் ரூ. 8,950 இலட்சங் கொண்ட தொகையைப் பயன்படுத்தியமை கொடு கடனுக்கான குறைந்த கேள்வியையும் பிரதிபலித்தது. வர்த்தக வங்கிகளின் மூலவளங்களில் ரூ. 7,540 இலட்சத்தை 1984 இல் அரசு பயன்படுத்தியதோடு இது 1983 இல் வர்த்தக வங்கிகளின் மூலவள ஆக்கத்திற்கான அதன் பங்களிப்பை மாற்றியமைத்தது. இவ்வாண்டில் சட்டரீதியான ஒதுக்குகளின் அதிகரிப்பினாலும் படுகடன் மீளளித்தலாலும் வர்த்தக வங்கிகளிலிருந்து மத்திய வங்கிக்கு ரூ. 11,180 இலட்சங் கொண்ட தேறிய வெளிப்பாய்ச்சலொன்று காணப்பட்டது.

அட்டவணை 1.47

**வர்த்தக வங்கிகளின் மூலவள மாற்றல்களும் அவற்றின் பயன்பாடும்**

ப. இ. ரூபாய்களில்

| துறை | | 1982 இறுதி/ 1983 இறுதி | 1983 இறுதி/ 1984 இறுதி |
|---|---|---|---|
| 1. அரசு | ... | 278.0 | — 754.1 |
| 2. மத்திய வங்கி | ... | — 41.6 | — 1,117.9 |
| 3. அரச கூட்டுத்தாபனங்கள் | ... | 532.3 | 1,732.5 |
| 4. கூட்டுறவு நிறுவனங்கள் | ... | — 527.5 | 331.2 |
| 5. ஏனைய தனியார் | ... | — 1,018.3 | — 895.2 |
| 6. வங்கிகளுக்கிடையே | ... | 1,243.8 | 485.0 |
| 7. வெளிநாட்டு | ... | — 466.7 | 218.5 |

மூலம் : இலங்கை மத்திய வங்கி.

குறிப்பு: கழித்தல் அடையாளம் மூலவளங்களின் தேறிய பயன்பாட்டைக் குறிக்கின்றன.

**வங்கிக் கிளை விரிவாக்கம்**

இவ்வாண்டில் அவதானிக்கப்பட்ட குறிப்பிடத்தக்க விடயம் பாதுகாப்பு நோக்கங்களுக்காக வடக்கு, வட மத்திய, கிழக்கு மாகாணங்களில் பல வங்கிகள் முதன்மைக் கிளையுடன் ஒன்றிணைக்கப்பட்டதும், தற்காலிகமாக வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டமையுமாகும். பல கிளை அலுவலகங்கள் மத்திய வங்கியின் அனுமதியுடன் கூடிய இடவசதியுள்ள இடங்களுக்கு மீளளிக்கப்பட்டன அல்லது நகர்த்தப்பட்டன.

1984 இல் வர்த்தக வங்கிக் கிளைகளின் மொத்த எண்ணிக்கை ஒன்றிணைப்பினால் 12 ஆல் ஓரளவுக்கு வீழ்ச்சியடைந்து 1984 இறுதியில் 1,022 ஆக விளங்கின. இவ்வாண்டில் வர்த்தக வங்கிகளின் 24 கிளைகள் ஒன்றிணைக்கப்பட்ட

தோடு இதில் 16 மக்கள் வங்கிக்கும், 7 இலங்கை வங்கிக்கும், 1 வரையறுக்கப்பட்ட அட்டன் நெஷனல் வங்கிக்கும் சொந்தமானதாகும். இதே வேளை வர்த்தக வங்கிகள் 13 புதிய கிளைகளை இவ்வாண்டில் திறந்தன. இது இலங்கை வங்கியின் 5 புதிய கிளைகளையும், மக்கள் வங்கியின் 4 புதிய கிளைகளையும் வரையறுக்கப்பட்ட அட்டன் நெஷனல் வங்கியின் 2 புதிய கிளைகளையும் வரையறுக்கப்பட்ட இலங்கை வர்த்தக வங்கியினதும் பாங் ஒவ் கிறெடிட் அன் கொமர்ஸினதும் ஒவ்வொரு புதிய கிளைகளையும் உள்ளடக்கும். மக்கள் வங்கி அதன் கொழும்பு துறைமுகக் கிளையை இவ்வாண்டில் மூடியது. ''பாங் ஒவ் கிறெடிட் அன் கொமர்ஸ்'' 1984 மேயில் கட்டுநாயக்க முதலீட்டுஊக்குவிப்பு வலயத்தில் கிளையொன்றைத் திறந்தது. இதே வேளை ''அமெரிக்கன் எக்ஸ்பிரஸ் இன்ரநெஷனல் பாங்கிங் கோப்பரேஷன்'' ஆசியாவிற்கான அதன் பிராந்திய அலுவலகத்தைக் கொழும்பில் நிறுவுவதற்கு அனுமதியளிக்கப்பட்டு 1984 மேயில் அதன் வியாபாரத்தைத் தொடங்கியது. தேசிய சேமிப்பு வங்கி இரு புதிய கிளைகளைத் திறந்ததன் மூலம் ஆண்டு இறுதியில் அதன் மொத்தக் கிளைகளின் எண்ணிக்கையை 52 ஆக உயர்த்தியது.


### வட்டி வீதங்கள்

பொதுவான வட்டி வீதக் கொள்கையை நோக்குகையில் 1984 ஆம் ஆண்டு வைப்பு வீதங்களைப் பொறுத்தவரையில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைக் காட்டியதெனினும் கடன் வழங்கல் வீதங்கள் சிறிதளவு மாற்றங்களை மட்டுமே காட்டின. தாராளமயப்படுத்தப்பட்ட பொருளாதாரக் கொள்கைகளுடன் 1977 இல் அறிமுகப்படுத்தப்பட்ட வட்டி வீதத் திருத்தங்கள் 1983 இலும் 1984 இலும் சில மாற்றங்களுக்குட்படுத்தப்பட்டன. வர்த்தக வங்கிகளின் வைப்புக்கள், கடன் வழங்கல் வீதங்களைத் தீர்மானிக்கும் முக்கிய காரணியாக நிதிகளின் வட்டிச் செலவு காணப்பட்டது. இது 1984 ஆம் ஆண்டில் சில வர்த்தக வங்கிகள் தமது வீதங்களைக் குறைத்த வேளையில் சில வங்கிகள் உயர்ந்த வீதங்களைத் தொடர்ந்தும் பேணி வந்தபொழுது மிகக் தெளிவாகக் காணப்பட்டது.

ஏற்றுமதிப் பணப்பெறுகைகளின் விரைவான அனுப்பல்களை ஊக்குவிப்பதற்காக 1984 மாச்சில் அறிமுகப்படுத்தப்பட்ட வட்டி தள்ளுபடித் திட்டத்துடன் மத்திய வங்கி அதன் வட்டி வீதக் கொள்கையில் பெரும் மாற்றங்களை மேற்கொண்டது. இதன்படி முன் கப்பற்படுத்தல் ஏற்றுமதிக் கொடுகடன், மீள் நிதியிடல் வசதியின் கீழான கடன்பாடுகளின் மீதான கடன் வழங்கலுக்குரிய வீதங்கள் 1 சதவீதப் புள்ளியால் ஆண்டொன்றிற்கு 12 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. அதே போன்ற சீராக்கங்கள் துணைநில் மீள் நிதியிடல் வசதியிலும் மேற்கொள்ளப்பட்டதுடன் இதன் மீதான கடன் வழங்கல் வீதங்கள் 1 சதவீதப் புள்ளியால் ஆண்டொன்றிற்கு 8.75 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது. நெற் சந்தைப்படுத்தும் சபைக்கு வழங்கப்பட்ட மீள் நிதியிடலைத் தவிர வேளாண்மை, சந்தைப்படுத்தல் மீள் நிதியிடல் வசதிகள் மீதான வீதங்கள் மாற்றமின்றியிருந்தன. மீள் நிதியிடல் வசதியின் கீழான எடுப்பனவுகளைக் கட்டுப்படுத்தும் பொருட்டும், மீள் நிதியிடல் கால எல்லையை நீடிப்பதனை நெற் சந்தைப்படுத்தும் சபை நாடுகின்றமையை ஊக்கம் குன்றச் செய்வதற்குமாக ரூ. 4,000 இலட்சத்திற்கு மேற்பட்ட மீள் நிதியிடலுக்கான வீதம் 2 சதவீதப் புள்ளிகளால் உயர்த்தப்பட்டது.

## வட்டி வீதங்கள்

காலாண்டு இறுதி எண்தொகைகள்




இலங்கை மத்திய வங்கி

வட்டி வீதங்களைத் தீர்மானிப்பதில் மேலாண்மையாளர்களின் தலையீடு இவ்வாண்டுக் காலத்தில் ஓரளவிற்குக் குறைவடைந்தது. இது பணச் சந்தை விசைகளைத் தொடர்வதற்கும் திரவத் தேவைகளுக்கும் நிதிச் செலவுகளுக்கும் இணங்க வட்டி வீதங்கள் தீர்மானிக்கப்படுவதற்கு ஒரு அடையாளமாக விளங்கியது. 1984 ஏப்பிரலில் தேசிய சேமிப்பு வங்கிக்கு அதன் வைப்பு வீதங்களையும், கடன் வழங்கல் வீதங்களையும் நிர்ணயிப்பதற்குச் சுதந்திரம் வழங்கப்பட்டமை இதுகாலவரை பின்பற்றப்பட்டுவந்த நிதி திட்டமிடல் அமைச்சின் அனுமதியுடன் அதன் வைப்பு வீதங்களை நிர்ணயிக்கும் நடைமுறையிலிருந்தும் நீங்கியமையை எடுத்துக் காட்டுகிறது. இக்கொள்கை அரசின் குறைந்த கடனபாட்டுத் தேவைக் கோட்பாட்டுச் சூழ்நிலையில் ஏற்படுத்தப்பட்டிருப்பதுடன் தேசிய சேமிப்பு வங்கியை அதன் சொத்துத் தொகுதியினைப் பன்முகப்படுத்த அனுமதித்திருப்பதன் மூலம் இலாபகரமான துறைகளில் முதலீடு செய்யும் பெரும் முயற்சிகளை மேற்கொள்ளவும் வழி அமைத்திருக்கிறது. இதன்படி 1984 யூலையிலிருந்தும் தேசிய சேமிப்பு வங்கி அதன் பன்னிரண்டு மாத நிலையான வைப்பு வீதங்களை (முதிர்ச்சியில்) ஆண்டிற்கு 20 சதவீதத்திலிருந்து 18 சதவீதத்திற்குக் குறைந்திருக்கின்றது. ஆறுமாத நிலையான வைப்புக்களுக்கான வீதமும் கூட ஒரு சதவீதப் புள்ளியால் ஆண்டிற்கு 14 சதவீதமாகக் குறைக்கப்பட்டது.

1983 இன் நான்காம் காலாண்டுப் பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட்ட நாணய மற்றும் கொடுகடன் கொள்கை வழிமுறைகளும், குறுங்கால தொழிற்படும் மூலதனத் தேவைகளுக்காகத் தேயிலை ஏற்றுமதியாளர்களிடமிருந்து தோன்றிய நிதிக்கான உயர்ந்து செல்லும் கேள்வியும் காரணமாகச் சில வர்த்தக வங்கிகள் உயர்ந்த வட்டி வீதங்களில் வைப்புக்களை உயர்த்துவதன் மூலமாகத் திரவ நிலைமையைப் பேணுவதற்கு முயற்சித்தன. எனினும் வைப்புக்களை ஒன்றுதிரட்டும் இலக்கு ஒருமுறை எட்டப்பட்டதும் வட்டி வீதங்கள் 1983 இன் இறுதிக் காலாண்டில் நிலவிய மட்டங்களுக்குக் குறைக்கப்பட்டதுடன் 1984 இன் பின்னரைப் பகுதியில் மேலும் குறைக்கப்பட்டன. ஆகவே, மிகையான திரவ நிலைமையும் போட்டியாளர்கள் அவர்களின் வட்டி வீதங்களைக் குறைத்தமையையும் தொடர்ந்து தேசிய சேமிப்பு வங்கியும், பெரும்பாலான வர்த்தக வங்கிகளும் வைப்பு வீதங்களை வேறுபட்ட அளவுகளிலும், வேறுபட்ட நேரங்களிலும் குறைத்தமையின் காரணமாகக் குறுங்கால வைப்பு வீத அமைப்பு முழுவதும் குறைந்த மட்டத்திற்குக் கொண்டுவரப்பட்டது. எனினும் குறிப்பிட்ட சில வங்கிகள் தெரிந்தெடுக்கப்பட்ட அடிப்படையில் உயர்ந்த வட்டி வீதங்களைத் தொடர்ந்தும் வழங்கி வந்தன.

அழைப்புப் பணச் சந்தை வீதங்கள் தொடர்ச்சியாக வீழ்ச்சியடைந்து செல்வதும் இரண்டாந்தர திறைசேரி உண்டியல் சந்தையில் தேறியவிற்பனைகள் படிப்படியாக அதிகரிக்கின்றமையும் வங்கித் தொழில் துறையில்மிகையான திரவத் தன்மை வளர்ச்சியடைகின்றமையை எடுத்துக் காட்டுகின்றது. அத்துடன் அதன் காரணமாக 1985 இன் முதற் காலாண்டுப் பகுதியில் சந்தை விசைகள் வைப்பு வீதங்களை மேலும் கீழே கொண்டு வருவதற்கான போக்கு காணப்படுகின்றது.

கடன் வழங்கல் வீதங்களில் சீராக்கங்களைச் செய்வதன் மூலம் வங்கிகள் தமது அதிகரித்த திரவ நிலைமைகளுக்குப் பொருத்தமான எதிர் நடவடிக்கைகளை எடுக்க முடியும் என எதிர்பார்க்கப்பட்டபோதும் இது நடக்கவில்லை. உண்மையில் சில தெரிந்தெடுக்கப்பட்ட அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்பட்ட தனிமைப் படுத்தப்பட்ட, வட்டிவீத சீராக்கங்கள் தவிர எந்தவொரு வர்த்தக வங்கியினாலும்

கடன் வழங்கல் வீதங்களில் பொதுவான குறைப்பு மேற்கொள்ளப்படவில்லை. ஆண்டின் பின்னரைப் பகுதி முழுவதும் வர்த்தக வங்கிகள் வைப்பு வீதங்களைக் குறைத்தன. எனினும் ஆறுமாத கால முதிர்ச்சியைக் கொண்ட வைப்புக்கள், குறைந்த வட்டி வீதங்களில் புதிய வைப்புக்களை ஏற்றுக்கொள்ளல் ஆகியவற்றின் காரணமாக ஆண்டின் இறுதியிலும் 1985 ஆம் ஆண்டின் தொடக்கத்திலும் வைப்புத் திரட்டல் அளவில் குறைப்புக் காணப்பட்டது. இலங்கையைப் பொறுத்தவரையில் சேமிப்பு, முதலீட்டுத் துறைகள் போதுமான அளவு இல்லாமையினுல் பொது மக்கள் வட்டி உழைக்கும் நிதிச் சொத்துக்களை எடுத்துக்காட்டாகச் சேமிப்பு, நிலையான வைப்புக்கள் போன்ற முக்கியமானவற்றை வைத்திருப்பதில் ஆர்வம் காட்டினர். குறிப்பாக இவ்வாறு நிலைமை இருந்த நேரத்தில் பணவீக்க நடைமுறை வீதம் வீழ்ச்சியடைந்தமையின் காரணமாகப் பணவீக்க எதிர்பார்ப்புக்கள் குறைவடைந்தன. இக்கருத்திற் பார்க்கையில் வர்த்தக வங்கிகள் குறைந்த வீதங்களில் நிதிச் சேமிப்புக்களைக் கவரத்தக்க நிலையிலேயே இன்னமும் இருக்கின்றன.

மத்திய வங்கியுடனுன சிறப்பு வைப்புக்களை உள்ளடக்கிய அதிகரித்த ஒதுக்குகள் வர்த்தக வங்கிகளின் கடன் உருவாக்கல் இயலளவை குறைத்ததுடன் வட்டிவீதங்களை மீள் ஒழுங்கு படுத்துவதற்கும் அனுமதித்தது. நாணயக் கொள்கை வழிமுறைகள் மற்றும் மாற்றமடைகின்ற சந்தை நிலைமைகளின் விளைவாக வர்த்தக வங்கிகள் வைப்புவீதங்களைக் குறைத்தன. எனினும் இரண்டு முக்கிய காரணங்களின் விளைவாக கடன்வழங்கும் வீதங்களில் உடனடியான பொதுக் குறைப்புக்கான சாத்தியங்கள் எதுவும் காணப்படவில்லை. ஒன்று உயர்ந்த வீதங்களில் வைப்புக்களைத் திரட்டும் ஒப்பந்தங்களுக்கு வங்கிகள் கட்டுப்படுத்தப்பட்டிருந்தமையின் காரணமாக வைப்புத்திரட்டலின் செலவு தொடர்ந்தும் உயர்வாக இருந்தது. இரண்டாவது உயர்ந்த பாதுகாப்பு ஒழுங்குகளும் அதிகரித்த நிறுவனச் செலவுகளும் நிதியங்களின் செலவினை உயர்ந்த மட்டத்தில் வைத்திருந்தன.

அரச கடன்பாடுகளுக்குப் பொருந்தத்தக்க (அரச பிணைகளும், திறைசேரி உண்டியல்களும்) வட்டி வீதங்கள் இவ்வாண்டுக் காலத்தில் மேல்நோக்கித் திருத்தப்பட்டமையின் காரணமாக அரச கடன்பாட்டு வீதங்களுக்கும், சந்தைக் கடன் வழங்கல் வீதங்களுக்குமிடையிலான இடைவெளி குறைக்கப்பட்டது. இத்திருத்தங்கள் முக்கியமாக நிதிகளின் உண்மையான வட்டிச் செலவினைப் பிரதிபலிக்கும் நோக்குடன் சந்தை வீதங்களில் கடன்படும் அரசின் விருப்பத்தினுல் தோன்றியுள்ளது. இதன்படி அரச பிணைகள் 2 சதவீதப் புள்ளிகளால் ஆண்டொன்றிற்கு 16 சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்ட வேளையில் 1984 ஒகத்திலிருந்து முதிர்ச்சிக் காலம் 5 இலிருந்து 6 ஆண்டுகளுக்கு நீடிக்கப்பட்டது. முதலாந்தர, இரண்டாந்தர திறைசேரி உண்டியற் சந்தைகள் இரண்டிலும் திறைசேரி உண்டியல்களின் வீதம் 2 சதவீதப் புள்ளிகளினுல் ஆண்டொன்றிற்கு 14 சதவீதத்திற்கு மேல்நோக்கி உயர்த்தப்பட்டது. புதிய திறைசேரி உண்டியல் வீதம் வர்த்தக வங்கிகளின் மூன்று மாத, ஆறு மாத நிலையான வைப்பு வீதங்களுடன் பெருமளவில் போட்டியிடக்கூடியதாக இருந்த வேளையில் அரச பிணைகளின் புதிய வீதம் பெரும்பாலான வர்த்தக வங்கிகளினுல் பன்னிரண்டு மாத நிலையான வைப்புக்களுக்கு வழங்கப்பட்ட வட்டி வீதங்களுடன் ஒப்பிடத்தக்க விதத்தில் இருந்தது.

மத்திய வங்கித் தொழில்

மத்திய வங்கியின் மொத்தச் சொத்துக்கள்—பொறுப்புக்கள் 1984 இறுதியில் ரூ. 332,720 இலட்சங்களாக அமைந்து முன்னைய ஆண்டின் அதிகரிப்பான ரூ. 29,300 இலட்சம் கொண்ட அதிகரிப்புடன் (10 சதவீதம்) ஒப்பிடுகையில் ரூ. 1,750 இலட்சம் (0.5 சதவீதம்) கொண்ட சிறிதளவு அதிகரிப்பைப் பதிவு செய்தது. இதற்கு முக்கிய காரணம் மத்திய வங்கியின் பன்னாட்டு ஒதுக்கு ரூ. 53,170 இலட்சத்தினால் குறிப்பிடத்தக்களவில் அதிகரித்தமையும், உள் நாட்டுச் சொத்துக்கள் ரூ. 51,420 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்தமையும் ஆகும்.

சொத்துக்கள் பக்கத்தில், மிகக் குறிப்பிடத்தக்க காரணியாக இருந்தது யாதெனில் வெளிநாட்டுத் துறையாகும். இது 1983 இன் ரூ. 1,510 இலட்சம் கொண்ட சிறிதளவான அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் பன்னாட்டு ஒதுக்கில் கணிச மான அதிகரிப்பை ஏற்படுத்தியிருந்தது. வெளிநாட்டிலுள்ள காசு, காசு நிலுவை கள் (ரூ. 38,390 இலட்சம்) வெளிநாட்டு அரச பிணைகள், திறைசேரி உண்டியல் கள் (ரூ. 14,930 இலட்சம்) ஆகிய உடைமைகளில் ஏற்பட்டதொரு அதிகரிப்பே பன்னாட்டு ஒதுக்கு கட்டியெழுப்பப்பட்டமைக்கு முதற் காரணமாகும். முன்னைய தில் ஏற்பட்ட அதிகரிப்பிற்கு வர்த்தக வங்கிகளிலிருந்தான வெளிநாட்டுச் செலா வணியின் தேறிய கொள்வனவில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க அதிகரிப்பே பெரு மளவு காரணமாகும். எனினும், சிறப்பு எடுப்பனவு உரிமைகளின் உடைமைகள் ரூ. 150 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்தன.

பன்னாட்டு ஒதுக்கில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க கட்டியெழுப்பலுக்கு மாறாக, சொத்துக்கள் பக்கத்தில் அவதானிக்கத்தக்கதாக இருந்த மற்றோர் அபிவிருத்தி யாதெனில் மத்திய வங்கியின் உள்நாட்டுச் சொத்துக்கள் 1983 இல் ஏற்பட்ட ரூ. 27,790 இலட்சம் கொண்ட அதிகரிப்பிற்கு மாறாக ரூ. 51,420 இலட்சத் தினால் கணிசமாக வீழ்ச்சியடைந்தமையாகும். இது முக்கியமாக அரச, அரச உத்தரவாதப் பிணைகளின் உடைமைகள் ரூ. 53,930 இலட்சத்தினால் குறிப்பிடத் தக்களவில் வீழ்ச்சியடைந்தமையினால் ஏற்பட்டதாகும். இரண்டாந்தர திறைசேரி உண்டியல் சந்தையின் கொடுக்கல் வாங்கல்கள் 1984 இல் அதிகரித்ததுடன் மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட தேறிய விற்பனைகள் 1983 இன் ரூ. 590 இலட்சத்துடன் ஒப்பிடுகையில் 1984 இல் ரூ. 15,630 இலட்சங்களாக விளங்கியது. உள்நாட்டுச் சொத்துக்களின் வளர்ச்சியைத் தடைசெய்த இன்னொரு காரணி வர்த்தக வங்கிகளுக்கும், ஏனைய நிதி நிறுவனங்களுக்குமான கடன் ரூ. 6,330 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்தமையாகும். இது குறுங்கால முற் பணங்கள் ரூ. 6,590 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்தமையினதும் நடுத்தர, நீண்ட காலக் கடன்கள் ரூ. 260 இலட்சத்தினால் சிறிதளவாக அதிகரித்தமை யினதும் தேறிய விளைவாகும். குறுங்கால முற்பணங்களில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு உத்தரவாத விலைத்திட்டக் கொள்வனவுகளின் கீழ் நெற்சந்தைப்படுத்தும் சபைக்கு வழங்கப்பட்ட மீள் நிதியிடல் கொடுகடனில் ஏற்பட்ட குறைப்பும், வர்த்தக வங்கிகளுக்குக் கிடைக்கத்தக்கதாக இருந்த பொதுக்கடன் வழங்கல் வசதி புறக்கீடு செய்யப்பட்டமையுமே முக்கிய காரணமாகும். அதுமட்டுமன்றி மத்திய வங்கியின் ஏனைய சொத்துக்கள், கணக்குகளும் கூட 1984 இல் ரூ. 3,660 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்தன.

பொறுப்புக்கள் பக்கத்தில், சுற்றோட்டத்திலுள்ள நாணயம், வைப்புக்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய நாணயப் பொறுப்புக்கள் 1983 இன் ரூ. 30,740 இலட்சம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1984 இல் ரூ. 18,260 இலட்சத்தினால் அதிகரித்தன. இவ்வாண்டுக் காலத்தில் நாணயச் சுற்றோட்டம் ரூ. 14,260 இலட்சத்தினால் அதிகரித்ததுடன் ஏறத்தாழ 1983 இன் அதிகரிப்பு வீதத்தை ஒத்ததாகவே இருந்தது. மத்திய வங்கியுடனான அரசின் வைப்புக்கள் 1983 இன் ரூ. 7,320 இலட்சம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் ரூ. 4,140 இலட்சத்தினால் வீழ்ச்சியடைந்த வேளையில் வர்த்தக வங்கிகளின் வைப்புக்கள் 1983 இன் ரூ. 11,700 இலட்சம் கொண்ட அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் 1984 இல் ரூ. 6,120 இலட்சங்களினால் உயர்வடைந்தன. வெளிநாட்டுக் கடன்பாடுகளும் ஏனைய பொறுப்புக்களும் கணக்குகளும் முறையே ரூ. 18,600 இலட்சத்தினாலும் ரூ. 3,490 இலட்சத்தினாலும் வீழ்ச்சியடைந்தன. வெளிநாட்டுக் கடன்பாடுகள் 1984 இல் பெரும்பாலும் மிகக் குறைவாக இருந்து நாட்டின் வெளிநாட்டு ஒதுக்கு நிலைமையின் கட்டியெழுப்பலைப் பிரதிபலித்தது.

### நாணயக் கொள்கை

1984 இல் அறிமுகப்படுத்தப்பட்ட நாணயக் கொள்கை வழிமுறைகள் பொருளாதாரத்தில் நிலவிய உயர்ந்த திரவ நிலைமையின் பின்னணிக்கு மாறாக உறுதியான நாணயத் தன்மையினையும் அதே போன்று அபிவிருத்தி நோக்கங்களையும் அடைவதற்கான ஒரு உண்மையான முயற்சியைப் பிரதிபலிப்பதாக விளங்கின. இந்நோக்கத்திற்காக 1983 இல் அறிமுகப்படுத்தப்பட்ட கொள்கை வழிமுறைகள் இவ்வாண்டில் மேலும் செறிவாக்கப்பட்டுத் தொடர்ந்தும் இருந்து வந்தமையின் காரணமாக நாணயத் துறையில் பல்வேறு அபிவிருத்திகள் அவதானிக்கப்பட்டன.

நாணயத் துறையை உறுதிப்படுத்தும் நோக்கமாக ஒதுக்கு நாணயத்தின் (நாணய அடிப்படை) வளர்ச்சியுடன் இணைந்த பாதகமான விளைவுகளைத் தணிக்கும் பொருட்டு நெற்சந்தைப்படுத்தும் சபைக்குக் கிடைக்கத்தக்கதாக இருந்த சந்தைப்படுத்தல் மீள் நிதியிடல் வசதியின் மீது மத்திய வங்கி 1984 மாச்சு 1 ஆம் நாளிலிருந்து ரூ. 4,000 இலட்சம் கொண்ட மேல் எல்லை ஒன்றை விதித்தது. வங்கி வீதத்தில் வர்த்தக வங்கிகளுக்குக் கிடைக்கத்தக்கதாயிருந்த பொதுக் கடன் வசதி புறக்கீடு செய்யப்பட்டதுடன் கப்பற்படுத்தலுக்கு முன்னான ஏற்றுமதிக் கொடுகடன் மீள் நிதியிடல் வசதி சமமானதொரு தொகையினால் உயர்த்தப்பட்டது. அத்துடன், ஒருபுறத்தில் முன்னுரிமையற்ற நோக்கங்களுக்கான நிதிகளின் கேள்வியைக் கட்டுப்படுத்தவும் மறுபுறத்தில் முன்னுரிமைத் துறைகளுக்குப் போதுமான கொடுகடன் வசதிகளை உறுதிப்படுத்துவதற்குமாக மத்திய வங்கி பல தெரிந்தெடுக்கப்பட்ட கொடுகடன் கட்டுப்பாட்டு வழிமுறைகளை நாடவேண்டியிருந்தது. நிரம்பல் ஊக்குவிப்பினையும் அதன் மூலம் வளர்ச்சி நோக்கங்களையும் அடையும் ஒரு முயற்சியாக மத்திய வங்கி ஏற்றுமதித் துறைக்கான கொடுகடன் பாய்ச்சலைத் தூண்டுவதற்காக ஏற்றுமதிக் கொடுகடன் மீள் நிதியிடல் வசதியை உயர்த்தியது. முன் கப்பற்படுத்தல் ஏற்றுமதிகளின் மீதான மீள் நிதியிடல் வசதி ரூ. 1,080 இலட்சத்தினால் மேலும் உயர்த்தப்பட்டதுடன் உயர்ந்த ஏற்றுமதி விலைகளின் விளைவாகத் தோன்றிய அதிகரித்த தொழிற்படு மூலதனத் தேவைகளினை ஈடுசெய்வதற்காகத் தேயிலை ஏற்றுமதிகளுக்கு மட்டும் ரூ. 3,500 இலட்சம் கொண்ட மேலதிக தொகை வழங்கப்பட்டது. இம்மாற்றங்களுடன் ஏற்றுமதிக் கொடுகடன் மீள் நிதியிடல் வசதியின் மொத்த எல்லை ரூ. 17,780 இலட்சங்களுக்கு உயர்த்தப்பட்டது.

மீள் நிதியிடல் வசதி உயர்த்தப்பட்டமைக்குப் புறம்பாக ஏற்றுமதித் துறையைப் பொறுத்தவரை குறிப்பிட்ட வேறு கொள்கை வழிமுறைகளும் நடைமுறைப்படுத்தப்பட்டன. முதலாவதாக நாணயத் தளம்பல்கள், செலாவணி வீதத்தின் மீதான ஊகத்தடை ஆகியவற்றின் காரணமாக ஏற்படும் செலாவணி இடர்க்காப்புகளுக்கெதிராக ஏற்றுமதியாளர்களைப் பாதுகாக்கும் பொருட்டு மத்திய வங்கி அனைத்து ஏற்றுமதியாளர்களும் 1984 மாச்சு 26 ஆம் நாளிலிருந்து தமது ஏற்றுமதிப் பணப்பெறுகைகளை வர்த்தக வங்கிகளுக்கு முன்விற்பனை செய்துவிட வேண்டுமென அவ் வங்கிகள் அவர்களைக் கட்டாயப்படுத்த வேண்டும் என அறிவுறுத்தியது. எனினும் ரூ. 500,000 இற்கும் குறைவான பெறுமதியைக் கொண்ட ஏற்றுமதிகளையுடைய சிறிய ஏற்றுமதியாளர்கள் இத் தேவைப்பாட்டிலிருந்தும் விலக்களிக்கப்பட்டனர். இதே நாளிலிருந்து முன் சந்தைப்படுத்தல் மீள் நிதியிடல் கடன்களின் காலம் 90 நாட்களிலிருந்து 60 நாட்களுக்குக் குறைக்கப்பட்டது. இம் மாற்றங்களுடன் ஏற்றுமதிப் பணப் பெறுகைகளினை நேரத்திற்கு அனுப்பி வைப்பதற்கு ஏற்றுமதியாளர்களை மேலும் தூண்டும் விடயமாக மத்திய வங்கி வட்டிகள் தள்ளுபடித் திட்டமொன்றினை அறிமுகப்படுத்தியது. வட்டி தள்ளுபடித் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் முன் கப்பற்படுத்தல் ஏற்றுமதிக் கொடுகடன் வசதிகளின் மீதான மத்திய வங்கியின் மீள் நிதியிடல் வீதம் ஆண்டிற்கு 10–13 சதவீதத்திற்கு உயர்ந்த வேளையில் வர்த்தக வங்கிகளினால் கடன் வழங்கல் வீதங்கள் 13 இலிருந்து 16 சதவீதத்திற்கு உயர்ந்தது. எனினும் ஆண்டிற்கு 4 சதவீதம் கொண்ட வட்டி தள்ளுபடியுடன் ஏற்றுமதியாளர்களுக்கு ஏற்படும் கடன்பாட்டுச் செலவு ஒரு சதவீதப் புள்ளியால் குறைக்கப்பட்டது. துணைநில் மீள் நிதியிடல் வசதியைப் பொறுத்தவரையிலும் கூட இதே போன்ற சீராக்கங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதில் கழிவு வீதம் ஆண்டொன்றிற்கு 7 இலிருந்து 10 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்ட வேளையில் வர்த்தக வங்கிகளின் கடன் வழங்கல் வீதங்கள் 9.75 இலிருந்து 12.75 சதவீதத்திற்கு உயர்த்தப்பட்டன. ஆகவே ஆண்டொன்றிற்கான 4 சதவீதம் கொண்ட வட்டி தள்ளுபடியுடன் இத்திட்டத்தின் கீழான கடன்பாட்டுச் செலவும் கூட 1 சதவீதப் புள்ளியால் குறைவடைந்தது.

இன்றியமையாதனவல்லாத இறக்குமதிகளுக்கான கொடுகடன் விரிவினைக் கட்டுப்படுத்தும் பொருட்டு மத்திய வங்கி அத்தகைய இறக்குமதிகளின் மீதான வர்த்தக வங்கிக் கொடுகடன்மீது உச்ச எல்லையை விதித்தது. இதன்படி, வர்த்தக வங்கிகள் உணவும் உணவுப் பண்டங்களும் தவிர்ந்த ஏனைய பொருட்கள், மூலப் பொருட்கள், கூறுகளும் இடைநிலைப் பொருட்களும், மருந்தும் மருந்தாக்கற் பொருட்களும், புத்தகங்களும் துண்டுப் பிரசுரங்களும், மூலதனப் பொருட்களும் அதன் பாகங்களும் ஆகியவற்றின் இறக்குமதிகளுக்காக வழங்கப்பட்ட அவற்றின் முற்பணங்களின் மொத்தத் தொகை 1984 மாச்சு 23 ஆம் நாளன்று வழங்கப்பட்டு வெளிநின்ற அத்தகைய முற்பணங்களின் மொத்தத் தொகையை விஞ்சக் கூடாது என அறிவிக்கப்பட்டன. அத்துடன் இன்றியமையாதனவல்லா இறக்குமதிகளுக்கான முன் செலாவணி வசதிகளுக்கு உதவ வேண்டாம் எனவும் தனிப்பட்டதொரு இறக்குமதியாளருக்கான அத்தகைய இறக்குமதிக்கான கொடுகடன் 1984 மாச்சு 23 ஆம் நாளில் அடையப்பெற்ற மட்டத்தினை விஞ்சக் கூடாது எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டன.

நிதிக் கூட்டு நிலையங்களில் வைப்புச் செய்தோரின் நலன்களைப் பாதுகாப்பதற்காக மத்திய வங்கி 1984 இல் குறிப்பிட்ட சில கொள்கை வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியது. வர்த்தக வங்கிகளின்மீது விதிக்கப்பட்ட உயர்ந்த ஒதுக்குத் தேவைகளுடன் ஒப்பிடுகையில் நிதிக் கூட்டு நிலையங்களின் மீது விதிக்கப்பட்ட

மொத்த வைப்புக்களின் திரவ விகிதத்தில் 5 சதவீதம் என்பது அவற்றின் வைப்பாளர்களினது நலன்களைப் பாதுகாக்கப் போதுமானதல்ல என்று கருதப் பட்டது. ஆகவே வைப்பாளர்களின் கடப்பாடுகளை ஈடுசெய்வதற்கு மதிநுட்பம் மிக்க திரவ விகிதத்தைப் பேணும் பொருட்டு அனைத்து நிதிக் கூட்டு நிலையங்களும் அவற்றின் மொத்த வைப்புக்களில் ஆகக் குறைந்தது 10 சதவீதத்தையாவது திரவச் சொத்து வடிவில் பேணி வர வேண்டும் என மத்திய வங்கி அறிவுறுத்தியது. அத்துடன் நிதிக் கூட்டு நிலையங்கள் இறுதி நிதியாண்டின் பன்னிரண்டு மாத காலப் பகுதியில் அவற்றின் சராசரி மாத இறுதி வைப்புப் பொறுப்புக்களில் 3 சதவீதத்திற்குச் சமமான தொகையை இலங்கை அரசின் திறைசேரி உண்டியல் வடிவிலும் பிணைகள் வடிவிலும் பேண வேண்டும் எனக் கேட்டுக் கொள்ளப் பட்டன. இவ்வழிமுறைகள் 1984 செத்தெம்பர் 1 ஆம் நாளிலிருந்தும் நடை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்டன.

1984 இன் முதல் மூன்று மாத காலப்பகுதியிலும் தனியார் துறைக்கான கொடுகடன் முன்னைய ஆண்டின் தொடர்பான மாதங்களுடன் ஒப்பிடுகையில் 20 சதவீதத்தையும் விஞ்சுகின்ற வீதத்தில் அதிகரித்தது. இத்துறைக்கான கொடு கடனில் ஏற்பட்ட விரைவான விரிவாக்கம் நாணய முகாமையில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தக் கூடுமாகையால் இதனைக் குறைக்கும் நோக்குடன் மத்திய வங்கி மேலும் தெரிந்தெடுக்கப்பட்ட கொடுகடன் கட்டுப்பாடுகளை நாடியமையின் காரணமாக ஏற்கனவே நடைமுறையிலிருந்த கொள்கை வழிமுறைகளை வலு வாக்கியது.

ஏற்றுமதி மற்றும் வேளாண்மை தவிர்ந்த தனியார் துறைக்கு வழங்கப்பட்டு வெளிநின்ற கடன்கள் முற்பணங்களின் தொகை 1984 மே 11 ஆம் நாளில் வழங்கப்பட்டு வெளிநின்ற அத்தகைய முற்பணங்களின் தொகையை 5 சதவீதத் திற்கும் கூடுதலான தொகையால் மறு அறிவித்தல் வரை விஞ்சக்கூடாது என 1984 மே 16 ஆம் நாளில் வர்த்தக வங்கிகளுக்கு அறிவிக்கப்பட்டது. முன் னுரிமைத் துறைகளுக்குப் போதுமான கொடுகடன் பாய்ச்சலை உறுதிப்படுத்து வதற்காக இவ்வழிமுறை அறிமுகப்படுத்தப்பட்ட வேளையில் முன்னுரிமையல்லாத் துறைக்கான கொடுகடன் கட்டுப்பாடு விரும்பத்தக்க மட்டங்களில் இருந்து வந்தது.

திரவ நிலைமையில் ஏற்பட்ட மிகக் கூடியளவு அதிகரிப்பு பொருளாதாரத்தில் மோசமான பணவீக்கத் தாக்கங்களை ஏற்படுத்துமாகையால் மேலும் சரியான வழிமுறைகள் தவிர்க்கமுடியாத தேவையாக இருந்தன. எனவே மிகையான திரவ நிலைமை விலைகளின் மீது பாதகமான விளைவுகளை ஏற்படுத்துவதுடன் நாணய விரிவாக்க வீதத்தை விரிவுபடுத்தக்கூடுமாகையால் இம்மிகையான திரவத் தன்மையை ஈர்த்துக்கொள்ள நடவடிக்கைகளை மேற்கொள்வது இன்றியமையாதது என உணரப்பட்டது. இதன்படி மிகையான திரவத் தன்மையை உறிஞ்சிக் கொள்ளும் ஒரு முதன்மை உபாயமாகவும் கேள்வி முகாமைக் கொள்கைகளுக்குத் துணைநிற்கும் ஒரு வழிமுறையாகவும் நாணயவிதிச் சட்டத்தின் 91 (1) (ஆ) பிரிவின் நியதிகளுக்கிணங்க விலைகோரல் முறையின்மீது அதன் சொந்தப் பிணைகளை வழங்குவதென மத்திய வங்கி தீர்மானித்தது. ஆண்டின் இறுதி வரையில் நடை முறையிலிருந்த இவ்வழங்கல்கள் ரூ. 5,570 இலட்சங்களை ஈர்க்கின்ற அளவிற்குத் தாக்கத்தையுடையனவாக இருந்தன.

மேலும் மிகையான திரவத் தன்மையை ஈர்த்துக்கொள்ளுவதற்காகவும் வர்த்தக வங்கிகளின் கொடுகடன் உருவாக்க இயலளவைக் கட்டுப்படுத்தும் பொருட்டும் ஏற்கனவே பேணப்பட்டுவரும் நியதி ஒதுக்குத் தேவைகளுக்குப் புறம்பாக வர்த்தக வங்கிகள் அவற்றின் அதிகரித்த வைப்புக்கள் தொடர்பாக சிறப்பு ஒதுக்குகளை மத்திய வங்கியுடன் பேண வேண்டுமென 1984 நவெம்பர் 14 ஆம் நாளன்று அறிவுறுத்தப்பட்டன. சிறப்பு ஒதுக்குகள் ஒதுக்கு வகை முறையின்கீழ், தீர்மானிக்கப்பட்டன. இம்முறையினது விபரங்கள் இவ்வறிக்கையின் பகுதி II இன் ''கணக்குகளும் தொழிற்பாடுகளும்'' என்பதன் கீழ் தரப்பட்டுள்ளன,

இக்கொள்கை வழிமுறைகளின் காரணமாக வங்கியல்லாத் தனியார்துறை வர்த்தக வங்கிகள் இரண்டினதும் கையிலிருந்த மிகையான திரவத் தன்மையின் கணிசமான பகுதி குறைக்கப்பட்டதுடன் இது வர்த்தக வங்கிகளின் கொடுகடன் உருவாக்க இயலளவிலும் குறைப்பினை விளைவித்தது.

மத்திய வங்கியின் வட்டி வீதக் கொள்கையைப் பொறுத்த வரையில் முன் கப்பற்படுத்தல் ஏற்றுமதிக் கொடுகடன் மீள்நிதியிடல் வசதி 1984 மாச்சில் அறிமுகப்படுத்தப்பட்ட வட்டி தள்ளுபடித் திட்டத்துடனான துணைநில் மீள் நிதியிடல் வசதி ஆகிய இரண்டின் வட்டி வீதங்களிலும் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்களைத் தவிர 1984 இல் பெரும் மாற்றங்கள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. அதுமட்டுமின்றி வட்டி வீதங்களின் கீழ் ஏற்கனவே குறிப்பிடப்பட்ட காரணங்களுக்காக உத்தரவாத விலைத்திட்டத்தின் கீழ் நெற்சந்தைப்படுத்தும் சபைக்கு வழங்கப்பட்ட சந்தைப்படுத்தல் மீள் நிதியிடலின் மீதான வீதத்தையும் மத்திய வங்கி 2 சதவீதப் புள்ளிகளால் உயர்த்தியது.

1984 இன் முன்னரைப் பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்ட நாணயக் கொடுகடன் கொள்கை வழிமுறைகள் இவ்வாண்டுக்காலத்தில் கொடுகடனின் அளவு, அதன் போக்கு இரண்டின் மீதும் பெருமளவு தாக்கத்தை ஏற்படுத்தின. மாச்சிலும் மேயிலும் கொண்டுவரப்பட்ட கொடுகடன் உச்ச எல்லைகள் தனியார் துறைக்கான கொடுகடனின் தேவையற்ற விரிவாக்கத்தைக் கட்டுப்படுத்துவதனையே நோக்கமாகக் கொண்டிருந்தன. எனினும் ஏற்றுமதிகள், வேளாண்மை ஆகியவற்றுக்கு வழங்கப்பட்ட வர்த்தக வங்கிக் கொடுகடன்கள் கொடுகடன் மேல் எல்லையிலிருந்தும் விலக்களிக்கப்பட்டும், சலுகை வட்டி வீதங்களில் உயர்த்தப்பட்ட மீள் நிதியிடல் வசதிகளை வழங்குவதன் மூலமும் மேலும் ஊக்கமளிக்கப்பட்டன.

மத்திய வங்கியினால் வடிவமைக்கப்பட்ட 1984 ஆம் ஆண்டிற்கான தேசிய கொடுகடன் திட்டம் தொடர்ந்தும் நான்காவது ஆண்டாக மத்திய வங்கியின் நாணய கொடுகடன் கொள்கைகளின் விரிந்த வரைச்சட்டத்திற்கு இணங்க தனியார் துறைக்கான வர்த்தக வங்கிக் கொடுகடனை மீள் நெறிப்படுத்த முயற்சித்தது. அரசின் வரவு செலவுத்திட்ட தொழிற்பாடுகளினதும் நாணயக் கூட்டுக்களின் மீதான வெளித்துறையினதும் தாக்கத்தைக் கருத்திற் கொள்கின்ற வகையில் அனைத்து வர்த்தக வங்கிகளினதும் தனியார் துறைக்கு வழங்கப்பட்டு 1984

இறுதியில் வெளிநிற்கும் கொடுகடனின் மொத்த அனுமதிக்கத்தக்க மட்டம் ஆண்டின் தொடக்கத்தில் ரூ. 365,370 இலட்சங்களில் இலக்கிடப்பட்டது. இதன் விளைவாக 1984 ஆம் ஆண்டுப் பகுதியில் தனியார் துறைக்கான கொடு கடன் ரூ. 51,290 இலட்சத்தினுல் அல்லது 16 சதவீதத்தினுல் அதிகரிக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது. முன்னைய ஆண்டினைப் போன்றே வேளாண்மைக் கைத் தொழில் ஏற்றுமதித் துறைகள் கொடுகடன் விரிவுத்துறையில் தொடர்ந்தும் முன்னுரிமை வாய்ந்த துறைகளாக விளங்கின.

1984 இன் தொடக்கத்தில் மத்திய வங்கியினுல் அறிமுகப்படுத்தப்பட்ட கட்டுப்பாடான நாணயக் கொடுகடன் கொள்கை வழிமுறைகள் காலாண்டிற்கான தொடக்க இலக்குகளுடன் ஒப்பிடுகையில் வங்கிக் கொடுகடனில் வீழ்ச்சியை விளைவித்தன. இவ்வாண்டுக் காலத்தில் வீடமைப்புத்துறை தவிர்ந்த அனைத்துத் துறைகளினதும் கொடுகடன் பயன்பாடுகள் வீழ்ச்சியைப் பதிவு செய்தன. எனி னும் கைத்தொழில், ஏற்றுமதித் துறைகள் 1984 இல் ஒதுக்கப்பட்ட மொத்தக் கொடுகடனில் 95 சதவீதத்தைப் பெற்றன. கொடுகடன் உச்ச எல்லையிலிருந்தும் விலக்களிக்கப்பட்டிருந்தபோதும் வேளாண்மைத்துறைக்கான கொடுகடன் ஆண்டு முழுவதும் குறிப்பிட்ட இலக்கிற்குப் பின் தங்கியே இருந்தது என்பதனை இங்கு குறிப்பிடுவது முக்கியமானதாகும். ஏறத்தாழ ரூ. 5,450 இலட்சம் அல்லது 13 சதவீதத்தைக் கொண்டிருந்த இத்துறையின் கொடுகடன் பயன்பாடு பெரு மளவு வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது. வேளாண்மைக்கான கடன் வழங்கல்கள் நடவடிக்கைகளில் வர்த்தக வங்கிகளினுல் ஆற்றப்பட்ட பங்கு மத்திய வங்கியின் மீள் நிதியிடல் வசதிகள் மிகக் கூடுதலாகக் கிடைக்கத்தகக்தாயிருந்த சந்தைப் படுத்தலை உள்ளடக்கிய குறுங்கால தொழிற்படு மூலதன ஒதுக்கிற்குப் பெருமளவு மட்டுப்படுத்தப்பட்டிருந்தது மட்டுமன்றி வேளாண்மைத்துறையில் மிகத் தேவை யாகவிருந்த நடுத்தர, நீண்டகால முதலீடுகளுக்குக் கொடுகடனை வழிப்படுத்து வதில் மெச்சத்தக்க முயற்சிகள் எதுவும் மேற்கொள்ளப்படவுமில்லை. வேளாண் மைக் கடன் வழங்கலின் குறைந்த செயலாற்றம் கொடுகடன் திட்ட மீளாய்வுக் கூட்டங்களில் தெளிவாகச் சுட்டிக்காட்டப்பட்டதுடன் இனிவரும் ஆண்டுகளில் வங்கிகள் வேளாண்மைத்துறைக் கடன் வழங்கலில் மிகக் கூடியளவிற்குத் தீவிர மாகப் பங்கேற்றுத் தொழிற்பட வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டன

1984 ஆம் ஆண்டுப் பகுதியில் நடைமுறையிலிருந்த கட்டுப்பாடான கொடு கடன் கொள்கை ஆண்டின் பிற்பகுதியில் உள்நாட்டுக் கொடுகடனின் ஆண்டு வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதில் பெருமளவிற்கு வெற்றியளித்தது. 1983 இறுதி யில் 16 சதவீதமாக இருந்த உள்நாட்டுக் கொடுகடனின் வளர்ச்சி வீதம் படிப் படியாக 1984 இறுதியில் 1 சதவீத மட்டத்திற்குக் குறைவடைந்தது. குறிப் பாகத் தனியார்துறையின் கொடுகடன் விரிவில் ஏற்பட்ட இம்மெச்சத்தக்க குறைவும் வங்கித்தொழில் முறையின் மிகையான திரவத் தன்மை ஓரளவு ஈர்க்கப்பட்டமைக்கும் இவ்வாண்டுக்காலத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட கொள்கை வழிமுறைகளே பெருமளவுக்குக் காரணமாகும். 1983 இறுதியில் 26 சதவீதமாக

விளங்கிய தனியார்துறைக்கான கொடுகடனின் அதிகரிப்பு தெரிந்தெடுக்கப்பட்ட கொடுகடன் கட்டுப்பாட்டு வழிமுறைகள் மூலமாகப் படிப்படியாக ஆண்டின் இறுதியில் 11 சதவீதத்திற்குக் குறைக்கப்பட்டது.

நாணயக் கூட்டுக்களிலும் விலை மட்டங்களிலும் ஏற்பட்ட அதிகரிப்பு வீதத்தில் ஏற்பட்ட கணிசமான மிதமான தன்மையை 1984 ஆம் ஆண்டு எடுத்துக் காட்டுகின்றது. மிதமான தன்மை குறுகிய பணத்தில் அதிகமாகக் காணப்பட்டது. விலைகள் பக்கத்தில், பணவீக்க வீதத்தில் குறிப்பிடத்தக்க வீழ்ச்சி காணப்பட்டது. கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணில் காணப்பட்ட மிதமான அதிகரிப்புடன் சேர்த்து மொத்த விற்பனை விலைச் சுட்டெண்ணின் அதிகரிப்பு வீதமும் கணிசமான வீழ்ச்சியைப் பதிவு செய்தது. அதிகரித்த வெளிநாட்டுச் சொத்துக்களின் விரிவாக்கத் தாக்கமும் பொருளாதாரத்தில் காணப்பட்ட பணவீக்கத் தாக்கங்களும் இவ்வாண்டுக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட நாணயக்கொள்கை வழிமுறைகளின் மூலமாக ஓரளவிற்குச் சமமாக்கப்பட்டது. அதேவேளை அரசாங்கத்தின் இறைக்கொள்கை வழிமுறைகள் நாணயக் கொள்கை வழிமுறைகளுக்குப் பெருமளவிற்கு உதவுவனவாக இருந்தன. வங்கித்துறையிலிருந்தான அரசின் கடன்பாடுகளில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க குறைப்பு நாணய விரிவாக்கத்தினைக் கட்டுப்படுத்துவதற்கு உதவியது. என்றாலுங்கூட அமைப்பியல் மற்றும் நிறுவனம் சார்ந்த குறைபாடுகளின் பெருமளவு காரணமாக இத்தகைய சாதகமான முன்னேற்றங்கள் உண்மையான துறையில் முழுமையாகப் பிரதிபலிக்கப்படவில்லை.